1372

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018

| தரம் - 6 | சைவநெறி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..............................

## பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. பிரணவ மந்திரப் பொருளாய் விளங்கும் கடவுள்
    1) சிவபெருமான் 2) விநாயகர் 3) முருகன் 4) நடராஜர்

02. கர்ண வேதனம் என அழைக்கப்படும் சடங்கு
    1) காது குத்துதல் 2) பெயர்சூட்டல் 3) சோறூட்டல் 4) ஏடு தொடக்கம்

03. ஆண்கள் செய்யும் நமஸ்காரமாக அமைவது
    1) அட்டாங்க நமஸ்காரம் 2) பஞ்சாங்க நமஸ்காரம்
    3) திரியாங்கம் 4) துவியாங்கம்

04. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம்
    1) வைகாசிமூலம் 2) சித்திரைச்சதயம் 3) ஆடிச்சுவாதி 4) ஆனிமகம்

05. பஞ்சபுராணத்தில் இறுதியாக பாடப்படுவது
    1) திருவாசகம் 2) பெரியபுராணம் 3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

06. திருப்பல்லாண்டை அருளிச் செய்தவர்
    1) சேந்தனார் 2) சேக்கிழார் 3) மாணிக்கவாசகர் 4) திருநாவுக்கரசர்

07. திருத்தாண்டகம் அடங்கியுள்ள திருமுறை
    1) நான்கு 2) ஆறு 3) ஐந்து 4) மூன்று

08. தூல லிங்கம் என அழைக்கப்படுவது
    1) மூலமூர்த்தி 2) கோபுரம் 3) கொடிகாமரம் 4) பலிபீடம்

09. சிவனடியார்களுக்கு திருவமுது படைக்கும் தொண்டு புரிந்தவர்
    1) கண்ணப்பர் 2) குங்கிலியக்கலயர்
    3) விறன்மிண்டர் 4) இளையான் குடிமாறனார்

10. முருகனுக்குரிய விரதமாக அமைவது
    1) திருக்கார்த்திகை 2) பிரதோசம் 3) சதுர்த்தி 4) சிவராத்திரி

11. சிவாலய தரிசன பலனைத் தருபவர்
    1) பிள்ளையார் 2) வைரவர் 3) சண்டேஸ்வரர் 4) முருகன்

12. தைப்பொங்கலுடன் தொடர்புடைய விழுமியப்பண்பு

1) நன்றி மறவாமை 2) உண்மை பேசுதல்
3) விளையாடுதல் 4) புகழடைதல்

13. மாணிக்க வாசகர் பௌத்தர்களுடன் வாதிட்டு வென்றபோது பாடியது

1) திருச்சாழல் 2) திருவெம்பாவை 3) திருவம்மானை 4) சிவபுராணம்

14. இறைவனால் திருமணப்பந்தலில் தடுத்தாட்கொள்ளப்பட்டவர்

1) சுந்தரமூர்த்திநாயனார் 2) மாணிக்கவாசகர்
3) திருஞானசம்பந்தர் 4) திருநாவுக்கரசர்

15. உணவு உண்ணத் தொடங்குமுன் பாடவேண்டிய தேவாரம்

1) "பித்தாப்பிறை……." 2) "மண்ணினல்ல வண்ணம்……."
3) "அன்னம் பாலிக்கும்……." 4) "இடரினும் தளரினும்……"

16. பாலபாடம் எனும் நூலை எழுதியவர்

1) ஔவையார் 2) விபுலானந்தர் 3) ஆறுமுகநாவலர் 4) திருவள்ளுவர்

17. தீபாவளியுடன் தொடர்புடைய அசுரன்

1) கயமுகன் 2) நரகாசுரன் 3) சூரபன்மன் 4) சிங்கமுகன்

18. கோயில் என்று சிறப்பிக்கப்படும் தலம்

1) திருப்பிரமபுரம் 2) திருப்புகலூர் 3) தில்லை 4) திருவதிகை

19. தென்னவன் பிரமராஜன் என அழைக்கப்பட்டவர்

1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்திநாயனார்

20. ஆலய வழிபாட்டினால் கிடைக்கும் பயனாக அமைவது

1) பணம் கிடைக்கும் 2) அருள் கிடைக்கும்
3) தலைவாழையிலையில் உண்ணலாம் 4) சிறந்த பொழுது போக்காகும்

(20X2=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுது பாடியவர் பெயர் தலம் என்பவற்றை எழுதுக.

1) "பித்தாப்பிறை.........."
2) "பூசுவதும் வெண்ணீறு............"
3) "சீரும் திருவும்............"
4) "ஒளிவளர் விளக்கே............"
5) "உலகெலாம்............"

(7+ ½ + ½ X2=16 புள்ளிகள்)

02. "விழுமியங்கள் மனிதவாழ்வை மேம்படுத்த உதவுகின்றன."
1) விழுமியப் பண்புகள் 4 எழுதுக.
2) பெரியோர் முன்னிலையில் செய்யத்தகாத செயல்கள் எவை?
3) நன்றி மறவாமையுடன் தொடர்புடைய குறட்பா ஒன்று எழுதுக
4) அன்றாடம் நீர் கடைப்பிடிக்க வேண்டிய சைவப் பழக்கங்கள் எவை.

(2+3+3+3=11 புள்ளிகள்)

03. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
1) ஆலயத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்?
2) ஆலயத்தில் செய்யக்கூடிய நமஸ்காரங்கள் எவை?
3) ஆலயத்தில் செய்யத்தக்க தொண்டுகள் 5 எழுதுக?
4) ஆலய வழிபாடு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

04. "சமயகுரவர்கள் இறையருள் பெற்ற அருளாளர்கள்"
1) திருநாவுக்கரசரின் தாய் தந்தை பெயர், இயற்பெயர் என்பவற்றைத் தருக?
2) மாணிக்க வாசகர் அருளிய நூல்கள் எவை? அவை எத்தனையாம் திருமுறையில் உள்ளது.
3) சுந்தரமூர்த்திநாயனார் செய்த அற்புதங்கள் மூன்று எழுதுக.
4) திருஞானசம்பந்தர் இறைவனால் எவ்வாறு ஆட்கொள்ளப்பட்டார்?

(2+3+3+3=11 புள்ளிகள்)

05. சிவசின்னங்கள் வாழ்வில் உயர்வை அளிக்கின்றன.
1) சிவசின்னங்கள் எவை?
2) விபூதியை அணியும் முறைகள் எவை?
3) பஞ்ச புராணம் ஓதும் ஒழுங்கு முறை யாது?
4) விசேட தினங்களில் மேற்கொள்ளத்தக்க சைவப்பழக்கங்கள் எவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

06. விரதங்களும் பண்டிகைகளும் வாழ்வை மேம்படுத்துவன
1) விரதம் என்றால் என்ன?
2) விரதங்களை அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய பொதுவான நியதிகள் எவை?
3) சித்திரை வருடப்பிறப்பு தினத்தில் நடைபெறும் கருமங்கள் எவை?
4) பண்டிகைகள் மூலம் வளர்த்துக் கொள்ளக்கூடிய பண்புகள் யாவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

07.
1) இளையான் குடிமாறனாருக்கு இறைவன் வறுமை உண்டாக்கியதன் காரணம் யாது?
2) ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்தை விட்டு தமிழகம் சென்றதன் காரணம் யாது?
3) ஞானப்பிரகாசர் சிதம்பரத்தில் செய்த பணிகள் எவை?
4) ஞானப்பிரகாசர் உரை எழுதிய நூல் எது?

(3+3+3+2=11 புள்ளிகள்)

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினுடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page